KALAKALAPPU
Monthly Cartoon Magazine

யூன் 1976

Editor : S. K. THEESAN
ஆசிரியர் : எஸ். கே. தீசன்
உதவி : C. S. பாஸ்கர்

# கலகலப்பு

ரெளடி ராஜிகாவைத் தேடி பொலீஸ் வேட்டை விபாரம் உள்ளே!

LOVE BIRDS பக்கம் 3



மனைவி : எனது தாலிக்கொடியை அடைவு வைத்தெனுலும் என் மகளை இந்தியாவிற்கு அனுப்பி போடிங்கிலே விட்டுப் படிப்பிக்க வேண்டும்.

கணவன்: ஏனப்பா அப்பிடிச் சொல்லுருய் ?

மனைவி: இப்ப இந்தியாவிலே சீதன ஒழிப்பு முறை வருகுதாம். வெளி நாட்டு குமர்ப் பெடியளெல்லாம் சீதணமில்லாமல் கலியாணம் செய்ய அப்பிளிக்கேசன் போடுருங்களாம், என்ர குமரும் கரை சேரட்டும். இந்தச் சாட்டிலே நாமும் ஒருக்கா ...

★ கன்னியர் காதலுக்கு பயந்து காளையர்கள் மதிலேறி ஓட்டம்

★ ஆண்கள் விடுதியில் பலத்த பொலீஸ் காவல்

★ அன்பைத் தேடி பார்க்க பதிவு தபாலில் காதல் கடிதம்

★ ஆண் உடையில் சென்று ஆண் கடத்தல்

விலை சதம் 50

விவசாயிகளின் வளர்ச்சியே நாட்டின் உயர்ச்சி

விவசாயிகளே ! நாள்முழுதும் கஷ்டப்பட்டு உழைத்தால் மட்டும் போதாது உற்பத்திப் பொருட்களை நல்ல விலையிலே விற்பனை செய்யவும் வேண்டும்

அதற்கு தேடுங்கள் ! பயனை நாடுங்கள் !!

மலை மகள் அன் கோ.
MALAI MAKAL & Co.
உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்
174, 4ம் குறுக்குத்தெரு, (கமிஷன் ஏஜென்ட்) கொழும்பு 11

எமது ஸ்தாபன திறப்பு விழாவில் சமுகம் தந்து ஆதரவளித்த அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.
தொலைபேசி: 24364

★ திருமணத்தின் மூன் பெண்கள் கர்வமாக இருக்கலாம். ஆனால், கர்ப்பமாக இருத்தல்தான் கூடாது.
— கவிதா

★ I Smile, He Spends that's all Pada Pad.

★ கவிதா அவள் ஒரு கவிதை.

★ திரையிடப்பட்ட நாளிலிருந்து ஹவுஸ் புல் காட்சிகள்

யாழ் ராணியில் காட்சியளிக்கிறது அவள் ஒரு தொடர் கதை

★ சுஜாதா ★ கமலஹாசன் ஸ்ரீபிரியா ★ தேவகி ★ லீலாவதி ★

★ மேலும் பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்த ★

அவள் ஒரு தொடர் கதை

திரைக் கதை, வசனம், டைரக்ஸன் : K. பாலச்சந்தர்

சிறந்த சேவை ! சீக்கிர சேவை !
குறைந்த செலவு ! நிறைந்த பயன் !

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில்

★ எலெக்ரிக் மோட்டார் ஆமேச்சர், டைனமோ றிவைண்டிங்
★ நீரிறைக்கும் (மண்ணெண்ணை) இயந்திரம்
★ எலெக்ரிக் மோட்டார் பம்புகள் பழுதுபார்த்தல்
★ கட்டிடங்களுக்கு வயரிங்வேலை செய்தல், பழுதுபார்த்தல்
★ சகலவிதமான பைப் வேலைகள், பழுதுபார்த்தல்

விஜயம் செய்யுங்கள்

நியூ எலெக்ரோனிக்ஸ்
NEW ELECTRONICS

442, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

ஸ்ரீதர் திரையில்

● வெகு விரைவில் எதிர்பாருங்கள்

★ ஜெயசித்திரா ★ சிவகுமார் நடித்த

பொண்ணுக்கு தங்கமனசு

※ உள்ளூர் விளைபொருள் உற்பத்திக்கு ஊக்கமளியுங்கள்

உள்ளூர் விளைபொருள் நல்ல விலையில் விற்றிட

மாரியப்பா அன் கோ.
(கமிஷன் ஏஜென்ட்)

44, 46, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11 T'p 24365

★ 200 ரூபா பரிசு பெறும் குறுக்கெழுத்துப் போட்டி அடுத்த இதழில் ★

## ஆசிரியர் கருத்து

அன்பு வாசகர்களே!

திட்டோ திட்டு ஏச்சோ ஏச்சு

இடையிடையே ஒரு சில பாராட்டு இப்படி கடிதங்கள் (பிந்திய மெயில் வண்டி மூலம்) ஒழுங்காக வந்து சேர்கின்றன

பெண்கள் ஆண்களைப் பற்றியும் ஆண்கள் பெண்களைப்பற்றியும் கண்டதிண்டபடி எழுத அனுமதித்த கலகலப்பு இவைகளையெல்லாம் கண்டு சலிக்கமாட்டாது நகைச்சுவையுடன் இளைஞர்களை மாதாமாதம் பல்சுவை நிகழ்ச்சியுடன் விவசாய சம்பந்தமான ஒரு சில விடயங்களையும் பரப்பிவருகிறது.

பொதுசனசேவை இளைஞர்க்கு தேவை என்ற வாசகத்தை தற்பொழுது கலகலப்பு மேற்கொள்கிறது.

இளம் விவசாயிகள் முயற்சிகளை ஊக்கமளிக்க கலகலப்பு பல்வித முயற்சிகளை மேற்கொள்கின்றது. இன்று யாழ் மாவட்டத்தில் ஒருசில தனியார் ஸ்தாபனங்களே! பல உதவிகளை மனம் கோணாது செய்துவருகின்றனர். இதுபோன்று ஏன் ஏனையோரும் செய்தல் கூடாது.

செய் அல்லது...............

அதிகம் எழுதி விட்டேனோ?

Full Stop


## வெளிநாடு செல்லப் போகிறீர்களா?

## இதோ இலவச பயிற்சி

படிக்கச் சென்று வெளிநாடுகளில் வேலையின்றி தவிக்கும் மாணவ மாணவிகளே,
மின்சார இயந்திரமூலம்
துணி கழுவும் மெஷின் (Cloth Washer)
கோப்பை கழுவும் மெஷின் (Dish Washer)
போன்றவை இயக்குமுறைகளை இயக்கும் முறைகளை இலவச பயிற்சி அளிக்கப்படும்
25 ரூபா கட்டி விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளவும்

விபரங்கட்கு: அலங்கோலம் & கோ
C/o கலகலப்பு


தொல்லை ★ | தொல்லை ★ தொல்லை ★ | தொல்லை ★ தொ ல்

## கன்னியர்க்கு!

இனுவை வாலி

கல்லூரி கடைத்தெருவில் செல்லும் போதும்
கண்டபடி திரிகின்ற இளைஞர் தொல்லை
கட்டைக் கவுணணிந்து செல்லும் போதும்
காவாலிக் காற்றாலே பெரிய தொல்லை
மினியணிந்து பஸ்ஸினிலே செல்லும் போதும்
முன்னாலே அமர்ந்திருப்போர் பார்வை தொல்லை
சாறியினை நானணிந்து செல்லும் போதும்
நாட்டுப் புறமெனக் கேலிசெய்வோர் தொல்லை
மக்ஸியையும், பெல்பொட்டம் அணிந்து சென்றால்
ஓ! பெரிய அழகுராணி என்போர் தொல்லை
நான் விரும்பும் இளைஞனுடன் கதைக்கும் போதும்
சூழநின்றே கேலி செய்வோர் பலரின் தொல்லை
கண்டவுடன் காதலையே வளர்க்க எண்ணும்
காளையர்கள் குணம் நடையை அறிதல் தொல்லை
மனமறிந்து குணமறிந்து திருமணமும் வந்தால்
சீதனமே குழப்பி விடும் வாழ்வே தொல்லை
இப்படியே பலதொல்லை கிடந்து நாமும்
இவ்வுலகில் வாழ்வதிலே கோடி தொல்லை.

## காளையர்க்கு!! ☆ ★ ☆ ☆

காதலையே நாம் விரும்பி இளமை வாழ்வில்
காதலிக்க நாம் விரும்பின் தொடர்ந்து தொல்லை
கால்கடுக்க மணிக்கணக்காய் பஸ்தரிப்பில்
காதலிக்காய் நின்றங்கே அலைவ(து) தொல்லை
நண்பர்களுதவியுடன் தமிழ் வசனம் சேர்த்து
தொடர்வரிகள் சேர்த்து மடல் எழுதல் தொல்லை
கண்டொஸ், கச்சானுடனே, கைலேஞ்சியும்
காதலுக்கு லஞ்சமாக கொடுப்போர் தொல்லை
எதிர் காற்றும் பார்க்காமல் சைக்கிள் மீது
காதலியின் வீடறிய திரிதல் தொல்லை
கல்லூரி பாடத்தினை படிக்கும் போதும்
கனவினிலும் நினைவினிலும் காதல் தொல்லை
நீள்சடையுடனும், நிலம் கூட்டும் உடையுடனும்
நாள் கணக்காய் காதலியின் திரிதல் தொல்லை
விலையுயர்ந்து போனாலும் 'கோம்பா' வாங்கி
'வூடோ'க்கு அலைந்திடுதல் பெரிய தொல்லை
ரோமியோவின் யூலியட்டின் கதையைப் போல
நிகழாமல் பார்ப்பதுதான் பெரிய தொல்லை
சீதனமே வாங்கிடவே கணக்குப் போடும்
பெற்றோர்க்கு எம்மாலே தொல்லை! தொல்லை!



# கட்டிலிட்டார் மெத்தை தலையணையிட்டார்

கட்டிலிட்டார் மெத்தை. தலையணைகள் இட்டார்
கண்கவரும் வெண்துகிலும் விரித்தார் மேலே
பட்டுப்போர்வை மடித்துப் பாக்கில் வைத்தார்
பட்ட இடம் கமழ்கின்ற பன்னீர் வீசித்
தட்டுகின்ற காம்பகற்றி மலர்கள் இட்டு
சந்தனம் பன்னீர், அடைகாய்த் தட்டமைத்து
மட்டின்றி முக்கனி, பால், பண்ணியங்கள்
வைத்தெங்கும் விளங்கங்கள் ஏற்றினார்கள்
மிகச் சிறப்பு செய்திட்ட தனியறைக்கு
வெளிப்புறத்து தாவாரம் நிறையக் கூடி
நகைத்தாடும் குழந்தைகளில் ஒருவன் கேட்டான்
நாங்கள் விளையாடும் அறை இதுவோ என்று
''புகவேண்டாம் புதுமணப்பெண் புதுமாப்பிள்ளை
புலவர் தரு திருக்குறளின் பொருளாய் தற்கு
வகைசெய்து வைக்குமிடம் வாழ்வில் இன்பம்
வாய்க்கும் இடம்!'' மணமக்கள் வாழ்க நன்றே.

— புரட்சி கவிஞர்: பாரதிதாசன் —

(இன்பத்துறை)
[குடும்ப விளக்கு எனும் நூலிலிருந்து]

# நினைத்தது நிறைவேறும்



கூட்டிக்கொண்டு

அந்த பிரசவ விடுதியில் கணவனும் மனைவியும் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

மனைவி: எனக்கு இம்முறை பெண் குழந்தை தான் பிறக்கும். பெண் குழந்தை பிறந்தால் என் செலவில் உங்களை இலங்கை முழுவதும் சுற்றுலா கூட்டிக்கொண்டு செல்வேன் என்றார்.

கணவன்: இல்லையில்லை எனக்கு இம்முறை ஆண் குழந்தை பிறக்கும், ஆண் குழந்தை பிறந்தால் என் செலவில் இந்தியாவிற்கு கூட்டிச் சென்று தலங்கள் எல்லாம் காண்பிப்பேன் என்றார்.

இரண்டு நாள் கழிந்தது. குழந்தையும் பிறந்துவிட்டது.

நர்ஸ் வந்து சொன்னார் நீங்கள் இருவரும் அதிஷ்டசாலிகள், நீங்கள் இலங்கையும் பார்க்கலாம் இந்தியாவும் பார்க்கலாம், சோடிக் குழந்தை பிறந்திருக்கிறது. ஒன்று ஆண் மற்றது பெண்.

அமைதியாக இருந்தனர் இருவரும்.

— டோ —

# எல்லா பத்திரிகைகளிலும் நண்பர்கள் தேவையா ? பகுதி வெளிவருகிறது

## இதோ கலகலப்பு தருகிறது !

பெயர் பொழுது போக்கு

★ செல்வி நீள்விழி மூக்கையா, விழிப்புரம்.

விருப்பமான துறை: கண்ணுக்கு மைபூசுதல், மரு தோண்டி அரைத்தல், வீதியில் மாங்காய் பறித்தல்.

பொழுது போக்கு: பாடசாலைக்கு செல்லுதல், இளைஞர்களுக்கு கடிதங்கள் எழுதுதல்.

★ செல்வன் நீள்முடி சடையப்பா

விருப்பமான துறை: அதிக சீதன பெண்ணை திருமணம் செய்தல்.

பொழுது போக்கு: யாருக்காவது பரீட்சை எழுதுதல், மொட்டைக் கடிதம் எழுதுதல். நேர்முகப் பரீட்சைகளுக்கு செல்லுதல்.

★ செல்வி சேவல் கொடி

விருப்பமான துறை: மந்திரியாக வருவது.

பொழுது போக்கு: எலக்ஷன் கேட்டல், இளைஞர்களின் புகைப்படம் சேகரித்தல், பழைய பத்திரிகை படித்தல். சிநேகிதருக்கு கடிதம் எழுத வசனங்கள் கூறுதல்.

★ நரசிம்மன்

விருப்பமான துறை: டியூட்டரி நடாத்துதல்.

பொழுது போக்கு: சிகரெட் பிடித்தல், பகலில் தூங்குதல்.

விபரம் தருவோர்:
குடத்தனை சிவஞானம் & டோ.

ஆண்கள்தான் கூடுதலாக பெண்களைக் காதலிப்பதாகவும், அழகு சாதனங்கள், சேலைகள் பலவற்றையும் கொடுத்து பெண்களுக்காக தவம் கிடப்பதாகவும் பலர் கூறுகின்றனர். தற்பொழுது ஆண்கள் வெளிநாடுகளில் சென்று திருமணம் செய்வதால் இங்குள்ள பெண்கள் இப்படியும் மாறலாம் என கற்பனைகொண்ட 'டோவின் கற்பனை'

**காதலே போ! போ!!**
கச்சேரி பஸ்ஸில்
ஒரு பெண்ணால்
காதலித்துகைவிடப்பட்ட
ஒரு கன்னக்கிறுதி
இளைஞனின்
சோகக் கதை.


# லவ் பேட்ஸ்

# LOVEBIRDS

ஆசிரியர்: 'டோ' Editor: 'Dow'


வெகு விரைவில்
**ஆர்சிக்குட்டிக்கு வார்ச மாப்பிள்ளை**
கலகலப்பு தரும்
முழுநீள
(நகைச்சுவை நாடகம்)

## ஆண்கள் பாடசாலையின் முன் கன்னியர் கும்பல்

## காளையர்கள் பாடசாலை பின் மதிலால் ஓட்டம் கால் முறிந்து 4 பேர் வைத்தியசாலையில்

காலையும் மாலையும் நான் பாடசாலைக்கு வரும் பொழுது பல கன்னியர்கள் சந்திகளிலும் பாடசாலை வாசலிலும் நின்று, என்னைப் பார்த்து சிரித்தும், கண்ணாலும் ஏதேதோ கூறினர். அத்துடன் பதிவுத் தபாலில் 6 கன்னியர்கள் காதல் கடிதம் எனக்கு அனுப்பியிருந்தனர். அன்பைத் தேடி படம் பார்க்க ரிக்கற் தருவதாகவும் கூறினர். நான் அதற்கு பதிலளிக்கவில்லை, இதேபோல எனது நண்பர்களுக்கும் கடிதங்கள் வந்தன. எம்மைப் பின்னும் முன்னும் பல கன்னியர்கள் துரத்துகின்றதனாலேயே இன்று பின் மதிலால் ஓடினேம் என வைத்தியசாலையில் இருந்து ஒரு இளைஞன் குறிப்பிட்டான்.

## ஆண்கள் விடுதியின் முன் ஆயுதம் தாங்கிய பொலீசார்.

### வெளிநாட்டிலிருந்து மேலும் ஆயுதங்கள் தருவிக்க ஏற்பாடு

கன்னியர்கள் காதல் வேகம் கூடி காளையர்கள் காதல் வலையில் வீழ்ந்து சீதனமின்றி திருமணம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதை அடுத்து கன்னியர்கள் காளையர்கள் உள்ள விடுதி ஒன்றின் முன் ஆயுதம் தாங்கிய பொலீசார் காவல் புரிகின்றனர். இவர்களில் இருவரையும் யாரோ கன்னிகைகள் தமது காதல் வலையில் விழுத்தி விட்டதாக.


**கன்னியரே அணி திரள்வீர்**
**காதலே முழு மூச்சு**
காதல் திலகம் லவ் பேட்ஸ் லலிதா
நடாத்தும் ஊர்வலமும் கூட்டமும்
11 — 28 வயதுள்ள பெண்கள் மட்டும்
பங்கு கொள்ளலாம்.

**நாளை காதல் பேரவை கூடுகிறது.**


## வீதியில் சென்ற இளைஞனுக்கு 'வில்இன்சன்' பிளேட் கொடுத்து காதலிக்க முயன்றார் கன்னி

மயிரிழையில் 11 வயது மாணவன் தப்பியோடினன் ரக்ஸியில் ஓடியும் மாணவனை கோட்ட விட்டார் கன்னி (வியம் நாளை)

* * *

## ஆண் உடையில் சென்று அடுத்தவீட்டு அழகனைக் கடத்த முயற்சி!

### பொன்னம்மாவின் மகள்மீது பொலீசார் வலைவிரிப்பு!!

இதுவரையில் 16 க்கு மேற்பட்ட இளைஞர்களை கடத்த முயற்சி செய்து ஆண்களை கடத்தி, பெண்களுக்கு சீதனமின்றி பல திருமணங்களை முடித்து தகுந்த கமிஷன் பெற்றுவரும் பொன்னம்மாவின் பிரபல புத்திரி ரௌடி ராதிகா, நேற்று நண்பகல் அடுத்தவீட்டு அழகன் ஒருவனை ஆணுடையில் சென்று கடத்த முயற்சி செய்தபோது, அதிஷ்டவசமாக, பிடிபட்டார். இருப்பினும் 'கராட்டி' பழகிய இவர் மூவரைத் தாக்கிவிட்டு மறைந்துவிட்டார். பொலீசார் வலைவிரித்திருக்கும் இதே வேளையில் இவர் வெளிநாடு சென்றிருக்கலாம் எனவும் நப்பப்படுகிறது.

* × *


உங்கள் காதலில்
நம்பிக்கையும் பலமும்பெற
**"காதல் காப்புறுதி"**
**"LOVE INSURENCE"**
எடுக்கத் தவறுதீர்கள்.
காதல் காப்புறுதிச் சபை,
லவ்லேன்.


அறிஞர்களுக்கும் அயோக்கியர்களுக்கும் அவர்கள் சாவு நேரம் நல்லதாக இருப்பதில்லை.

※ நெசவுசாலை கன்னியர் கூட ...........
※ அவள் சுஜாதாவின் விசிறி...........



# கடவுளும்—கௌரவமும்



காதலியின் கடிதம், அநேக நாட்கள் கிடைக்காமல் திக்கு முக்காடி களையிழந்த காளைபோல் முகத்தை தொங்கப் போட்டுக்கொண்டிருந்தார் சிவன், சிவனே! வட் ஹப்பின்ட் ரூ யூ? What happened to you? தீசா! இன்று என்ன கிழமை''? இது என்ன கேள்வி சிவனே! இந்துக்களுக்கு புனிதமான வெள்ளிக்கிழமை

ம்..........

6 பேரைக் காதலித்து அனைவரையுமே இழந்து விட்ட கன்னிபோல் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் சிவன்,

என்ன நடந்தது?

வெள்ளிக்கிழமையாக இருந்தும் கோயில்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றனவே, அவ்வளவு பக்தர்களைக் காணவில்லையே! ...

ஹா ஹா ஹா .....

என்ன தீசா சிரிக்கிறாய், நீங்கள் கோயிலுக்கு அவர்கள் வரவில்லையென விழிக்கிறீர்கள் ஆனால், பாடசாலைகள் டியூடரிகளின் ஆசிரியர்களும் அங்கலாய்க்கின்றன.

மாணவர்களும் முன்னதாகவே மெற்னிஷோவிற்கு புறப்பட்டுவிட்டார்கள்.

நீ என்ன சொல்கிறாய்?

இன்று திகதியென்ன சொல்லுங்கள் பார்க்கலாம்

மே 7ம் திகதி

லக்கி செவின்

இன்று

அவள் ஒரு தொடர்கதை,

கௌரவம்,

இரு புதிய படங்கள் வெளியாகிறது.

அது தான் அங்கே முழுக் கூட்டமும்.

பக்கத்துவீட்டு வானொலியில்

''படைத்தானே! மனிதனை ஆண்டவன் படைத்தானே'' பாடல்கள் ஒலிபரப்பிக் கொண்டிருந்தது.

மனதுள் நான் சிரித்தேன்.

சிவனே! எனக்கு நேரமாகிறது நான் வரட்டுமோ?

எங்கே போகிறாய்?

இன்னும் புரியவில்லையா?

நானும் இன்று 2 படங்களும் பார்க்கவேண்டும்.

அடப்பாவி!

இந்த உலகைப் படைப்பவன் நான் என்னை விடவா உயர்ந்தது சினிமா?

படைப்பவர்களெல்லாம் அறிவாளிகளா?

8 பிள்ளைகளை பெற்றுவிட்டு இப்போ குடும்பக் கட்டுப்பாட்டு புத்தகம் படிக்கிறார் எனக்கு தெரிந்தவர், ஒருவர், அவர் அறிவாளியா?

8 பிள்ளைகளை படைக்க மட்டும் தெரியும் ..... ஏதோ படைக்கிறீர்கள் வரவா !

காவாலி, யாகிவிட்டாய் தீசா

அடடா அண்மையில் ஒரு கன்னியொருத்தி கடிதத்தில் என்னை காவாலியென்று எழுதியிருக்கிறார். அதாவது

கா—சோலை

வாலி—குரங்கு

சோலைக் குரங்கு

நான் அப்படியென்ன செய்துவிட்டேன்.

முருகன் தெய்வானையை மணமுடித்து கிழட்டு ரூபத்தில் வள்ளிக்காக ஓடிய ஓட்டம், அண்ணன் பிள்ளையார் உதவிய உதவி அதைவிடவா ...

ஹி . ஹி இல்லை

வந்து ...

சமாளித்தார் சிவன்

தீசா அதோ! அதோ!

எட்டிப்பார்த்தேன் ஒரு இளம் பெண் பாடசாலை மாணவியென்றே கூறலாம் புத்தகக்கடையெல்லாம் ஏறி இறங்கியவண்ணம் கவலை தோய்ந்த முகத்துடன் வருகிறாள்.

H.N.C.E. படிக்கும் மாணவியோ?

பெண்ணே! அமைதியாக அழைத்தார், சிவன் முறைத்தவண்ணம் திரும்பினார்.

நான் அழைக்கவில்லை அதோ என சிவனைக்காட்டினேன்.

பெண்ணே! உன் கவலையென்ன?

என்ன வேண்டுகோள்

சும்மா போப்பா?

அழாத குறையாக கூறினார்கள் எனது அபிமான விசிறி சுஜாதா அவள் ஒரு தொடர் கதையில் தி கிறேற் அமெரிக்கர்கள் ஸ்ரோறீஸ் The Great American Stories என்ற புத்தகம் வைத்திருக்கிறாள் அதுபோல நானும் வைத்திருக்க வேண்டாமா அப்போதானே எனக்கு கௌரவம்,

கடத்தல் சாரிகட்டிய கன்னிபோல் விழித்தார் சிவன்.

※ இன்பம் என்பது வேறு ஒன்றும் இல்லை, துன்பத்தின் இடைவெளியின் போது கிடைக்கும் ஓய்வாகும் ※

அதுசரி நீர் எதுவரை படித்திருக்கிறீர் 7ம் வகுப்புடன் படிப்பை குழப்பிவிட்டேன் இப்போ நெசவுக்கு போகிறேன், ஆங்கிலம் தெரியாது.

ஆனுல் அந்த புத்தகம் வைத்தால்தான் என் லவ்வர் என்னுடன்……… படாபட் படாபட் வட்இஸ் தற் படாபட் என்னைக் கேட்டார் இவன்

அவள் ஒரு தொடர்கதை பார்த்தால்தான் புரியும் என்றேன் நான்.

சனக்கும்பல்கூட இல்லாத தியேட்டர் பக்கம் செல்கிறுர் சிவன்.

ஆசிரியரைக்கூட கவனியாது மெற்ணிக்கு மாணவர் செல்வதுபோல் என்னையும் அசட்டை செய்யாது செல்கிருரே. நானும் பின் செல்கிறேன்.

போனதைவிட வேகமாக வந்தார், சிவன்.

கட கட

ஐயோ! ஆ டோய் பண்டி,

என்ன சிவனே!

அதோ! அதோ!

எட்டிப் பார்த்தேன் சனக்கும்பலைக் கட்டுப் படுத்த முடியாத பொலீசார் தமது கைவரிசையை ரசிகர்களுக்கு காட்டிக் கொண்டிருந்தனர்.

கௌரவம் இழந்து கௌரவம் ப ர்க்கவேண்டிய நிலை,

தியேட்டரின் உள்ளே கண்ணேட்டம் செலுத்தினேம். அடுத்த காட்சி பார்ப்பதற்காக ஒரு கன்னியர் கும்பல் நிற்கிறது.

50 யாருக்கப்பால் ஒரு காளையர் கும்பல்.

1 கன்னி 1 காளை, ஒருபார்வை

1 பார்வை, 1 சிரிப்பு

அதாவது

ஒரு கன்னி ஒரு காளையைப்பார்த்து ஒரு சிரிப்பொன்றை உதிர்க்க

ஒரு சிறிய அறிமுகம்

ஏதோ …கதை இளைஞனின் கையிலிருந்த 10 ரூபா பணம் கன்னியர் கைக்குள் மாறுகிறது.

சிவன் விறைத்துப்போனுர் சற்று நேரம் செல்ல அக்கன்னி, 4 ரிக்கற்றுகளை காளையிடம் கொடுக்கிருர் மீண்டுன், பல பார்வை பல சிரிப்பு அத்துடன்

அத்துடன்

தாங்யூ……

நியூ மற்ஸ் New Maths. படிக்கும் மாணவர் போல திக்குமுக்காடினுர் சிவன் இடைவேளையின் போது ரிக்கற் கன்னிக்கு சோடா ரொபி முதலியன காளையர்

அன்பளிப்பு

மீண்டும் பார்வை

……—………

……………

இதோ இது தான் என் முகவரி

ரைம் கிடைத்தால் வாருங்கள்

ஓ யேஸ்

சிவனே!

என்ன?…

எப்படி………



# நான் நன்றி சொல்வேன்…

டாக்டர் உங்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள், நீங்கள் எனக்கு தந்த மருந்திற்கு எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை

முன்னர் என் குழந்தையைக்கூட தூக்கமுடிவதில்லை, ஆனுல் இப்போ! எனது கணவனைக் கூட அடித்து உதைக்கும் அளவிற்கு சக்தி வந்திருக்கிறது சார்.

சந்தோசத்துடனும், பரிதாபத்துடனும் கேட்ட டாக்டார் கேட்டார் எனக்கு ஒரு சிறிய உதவி செய்வீர்களா?

என்ன டாக்டர்

என் மனைவியிடம் நீங்கள் குடுத்த மருந்தின் பெயரைக் கூறிவிடாதீர்கள்,

நானும் பிழைக்கவேணும்.

—டோ

எது ………

அவள் ஒரு……… கதை

தொடரும்போல தான் தெரிகிறது சிலேலடையில் கூறினுர் சிவன்.

வீதியால் சென்றுகொண்டிருக்கிறேம் ஒரு நடுத்தர வயது மாது, கையில் தேங்காயுடன் கற்பூரம் உற்பட விருவிருஎன நடந்து வருகிறுர்.

ஆச்சி எங்கோ போகிறீர்கள் இவ்வளவு அவசரமாக?

என் மகள் காலை 2 மணிக்கு படத்திற்கு என்று சென்றவர். இன்று ரிக்கற் கிடைக்க வேண்டுமென அவன் பேருக்கு ஒரே அரிச்சனை செய்யப் போகிறேன் உள்ளது ஒரேயொரு பிள்ளை அவளும் மனமுடைந்து, மருந்து கிருந்து குடித்தாலும் அது தான்………

சிவனே!

எது எதுக்கெல்வாம்

பக்தர்கள் அரிச்சனை செய்கிருர்கள் பார்த்தீர்களா?

மகன் படம் பார்க்க உங்களுக்கு லஞ்சமா?

அப்பப்பா என்ன வெயில் கதையை மாற்றுகிருர் சிவன்

அதோ………

தற்பொழுது குழு குழு ஏர்கண்டிசன் செய்திருக்கும் சுபாஷ் கபேயில் என்சார்பில் உங்களுக்கு ஐஸ்கிறீம் என்றேன் சுபாஷ் என்றதும் அடித்து விழுந்தடித்துக்கொண்டு என்பின் வந்தார். சிவன்

அமைதியாக சுபாஷினுள் நுளைந்தோம்.

---

காதல் பெண்களை உயர்த்திவைக்கிறது, அவர்களுக்கு பலமும் சக்தியும் அளிக்கிறது ஆனுல் ஆண்களை பலவீனப்படுத்துகிறது.

## காட்சி 1. (பகுதி 3)

ஆறுமுகத்தாருக்கு, மனைவி ஆச்சிக்குட்டி அடிக்க அகப்பையால் ஓங்கும்போது அவர்களது மகன் கண்ணன் ஒரு விமானக் கடிதத்துடன் வருகின்றான்.

கண்ணன்: ''அம்மா ! அம்மா !''

ஆறுமுகத்தார்: ''ஓ... இப்பதான் பள்ளிக்கூடத்துப் பெட்டையள் எல்லாம் பத்திரமாய் வீட்டை போய்ச் சேர்ந்துதுகள் போலை பெட்டையளைப் பெத்த தாய் தேப்பனுக்கு இல்லாத அக்கறை பெடியனுக்கு . ஆச்சிக்குட்டி! அந்த மினிஸ்கேட்டுக்காரி பல்லைக் காட்டினவளோ எண்டு கேள்!... பிள்ளை படிக்கக் கிழிச்சுப்போட்டு வருகிது.. ... சோத்திலை போட்டுத் தீத்திவிடு பாவம்! பெட்டையளுக்கு பின்னாலை திரிஞ்சு களைச்சுப்போச்சு... நானும் வாறன் தண்ணி பருக்க ..''

கண்: ''அப்பா! உங்களுக்கு இலண்டனில் இருந்து ஒரு கடிதம் வந்திருக்கு.. ''

ஆ. கு: ''என்ன ? கொப்பருக்கோ . ? இலண்டன் சிமையிலிருந்தோ ?'' (வியப்படைதல்)

ஆ. மு: ''வெள்ளைக்காரனுக்கு கோடப்போட்ட எங்கடை கருட்டுத் தேவைப்படுகிதோ . இல்லாட்டிக் கொம்மாவை அங்கினேக்கை சண்டைக்கு அனுப்பச்சொல்லி எழுதியிருக்கிறாங்களோ ? தெரியேல்லை . இஞ்சை கொண்டா பாப்பம் !''

[ஆறுமுகத்தார் கடிதத்தைத் திறக்க முடியாமல் திணற, கண்ணன் அதை வாங்கித் திறக்க, பதறிக்கொண்டிருந்த ஆச்சிக்குட்டி அவசரமாக அக்கடிதத்தை கண்ணனிடம் இருந்து பறித்துப் பார்த்துவிட்டு]

ஆ. கு: ''ஐயையோ ! உங்களைப்போல, ஆரோ வெருளி, ஏதோ கண்டபடி கிறுக்கிக்கிடக்குது ...''

கண்; ''ஆரோ அப்பாவுக்குத் தெரிஞ்ச வெள்ளைக்காரனுக்கும் எழுதியிருக்கிறான்''

ஆ. கு: ''கொப்பருக்கு இஞ்சத்தையில் தமிழரையே வடிவாத் தெரியாது... நீ கடிதத்தைப் படியன் பாப்பம்... கொப்பருக்கு ஆரேன் பெட்டை கிட்டை எழுதின கடிதமாக் கிடக்கட்டும் .. செய்யிறன் வேலை!''

[ஆச்சிக்குட்டி, ஆறுமுகத்தாரை முறைத்துப்பார்த்துக்கொண்டே கூற, அவர் நடுங்குகின்றார்]

கண்: ]கடிதத்தை படிக்கின்றான்[ ''மை டியர் அங்கிள்'' My (dear uncle)

ஆ. கு: ''அங்கிள் என்றுலென்ன அத்தானே! மேனை''
(ஆறுமுகத்தாரைப் பார்க்க அவர் திடுதிடு என்று விழிக்கின்றார்)

கண்: ''இல்லையம்மா! அப்பாவைத்தான் அங்கிள் எண்டு போட்டிருக்கு''

ஆ. கு: ''ஆறுமுகத்துக்கு இங்கிலீசு அங்கிள் போலை . அப்ப ஆச்சிக்குட்டிக்கு அங்கிளியோ! நல்ல இங்கிலீசுதான் ..'' [தனக்கே கூறிக்கொள்கிறாள்]

ஆ. மு: ''ஏதோ நான் தப்பினன் [பெருமூச்சு விடுகிறார்] என்னைப்பற்றி ஏதோ மொட்டைக்கடிதமாக்குமெண்டு ஏங்கிப்போனன் . டேய்! தம்பி, இங்கிலீசை கண்டபடி பெலத்துப் படிக்காதை, பல்லுக்கில்லு உடைஞ்சு போகும் . வாசித்து என்னெண்டு தமிழில் எனக்குச் சொல்லு''

கண்: (மெதுவாக தனக்குள் படித்துவிட்டு) அப்பா ! உங்கடை சினேகிதர் பஞ்சலிங்கமாம் . பள்ளிக்கூடத்திலை உங்களோடை படிச்சவராம் . ''

ஆ. கு: ''எட, நீங்களும் பள்ளியிலை படிச்சிருக்கிறியள் . பேந்தென்ன''



## ஆங்கிலம் வாய்ச்ச மாப்பிள்ளை

C. S. பாஸ்கர்

ஆ. மு: ''இல்லையெண்டால் எனக்கு எழுதுறனே ! இலண்டனிலையும் என்னைப்போல ஆக்கள் இருக்கினம்போல''

ஆ. கு: ''இல்லாட்டா, உங்களுக்கு எப்படிக் கடிதம் வரும்?''

ஆ. மு: ''ஆருக்கோ வந்ததை உந்தத் தபால்காரன் மாறித் தந்து விட்டானே ?''

கண்; ''இல்லையப்பா! விலாசத்திலை மிஸ்ரர் என். ஆறுமுகம் என்று இருக்கிது''

ஆ. மு: ''பாத்தியே நான் சொன்னன், உது எனக்கில்லை. என்ரை பெயர் நன்னிக்குட்டி ஆறுமுகம்! உது ஏதோ ஆச்சு பூச்சு ஆறுமுகம் எண்டு கிடக்குது ..''

கண்: ''இல்லையப்பா ! ஆரோ உங்களுக்குத்தான் இங்கிலீசிலை எழுதியிருக்கினம் ''

ஆ. கு: ''மேனை! அது இங்கிலீசுதான் எண்டு எப்படி உனக்குத் தெரியும்? நீ சோதனையிலை இங்கிலீசு பெயிலெல்லே.''

ஆ. மு: [ பெருமையுடன் சற்று நிமிர்ந்து]
''எந்தப் பஞ்சலிங்கம் ? [யோசிக்கின்றார்]

ஆ. கு: ''உங்கடை சினேகிதரெண்டால் ஆரேன் தறுதலையாக் இருக்கும் .. அவருக்கு இப்ப என்னவாம்.. ?''

கண்: ''அவற்றை மேனும் .. பேர் .. சம்பந்தனும் .. ஆ! ஞானசம்பந்தனும் மூழுப்பெயர்''

ஆ. கு: ''முக்கால் பெயச் என்னவாம்?''

ஆ. மு: ''ஏனப்பா! நீ அந்தரப்படுகிறாய்... நீ சொல்லடா''

கண்: ''தேப்பன் பஞ்சலிங்கம் செத்து பத்து வருஷமாச்சாம் .'' உங்களுக்குத் தன்னை தெரியுமோ எண்டு தெரியாதாம். தன்னுடைய தாய் தேப்பன் இரண்டு பேரும் செத்த பிறகு, தான் இலண்டனுக்குப்போய் கஸ்டப்பட்டுப் படிச்சு... இப்ப இஞ்சினியர் வேலை செய்து கொண்டிருக்கிறாராம்.

ஆ. கு: ''அதாரப்பா! உந்தச் சம்பந்தன்! பஞ்சலிங்கத்தின்ரை மேன்!''

திருமணம் என்பது கடைசியாக வந்து சேருமிடமல்ல, நீண்ட ஓர் பிரயாணத்தின் ஆரம்பம்

ஆ. மு: [யோசித்து விட்டு] அடடட! உவன் புளிச்சல் பஞ்சலிங்கத்தின்ரை பேரன். உங்கினேக்கை காவாலி களிசறையாத் திரிஞ்ச பெடியன் சீமைக்குப் போனதெண்டுதான் பறைஞ்சவை இப்ப இஞ்சினியராமோ''

கண்: ''ஓமப்பா! ஒரு மாத லீவிலை இஞ்சை வாரு ராம். ஊரிலே தனக்கு ஒருத்தரையும் தெரியா தாம். எங்கடை வீட்டிலேதான் தங்கப் போரு ராம்; திரும்பி இலண்டனுக்குப் போறதுக்கிடை யில் கலியாணம் முடிச்சுக்கொண்டு போகவேணு மாம்.. உங்களைப் பாத்து, நல்ல சீதனத்தோடை ஒழுங்கு செய்யட்டாம்.. வரும்போது உங்களுக்கு என்ன கொண்டு வாறதெண்டு தனக்கு உடனே காயிதம் எழுதட்டாம்.

ஆ. கு: 'தம்பி.. நீ படிச்சுச் சொன்னதெல்லாம் சரியோ? இல்லாட்டி வேறை ஆருக்கேன் காயி தத்தைக் காட்டிக் கேக்கிறதோ?

கண்! ''இல்லையம்மா! அப்பிடித்தான் எழுதியிருக்கு...

ஆ. மு: ''ஆச்சிக்குட்டி! பாத்தியே எனக்கும் இங்கி லீசில் காயிதம் வந்திருக்கு எப்பிடி உன்ரை புரு சன்ரை மகிமை''

ஆ. கு: ''இண்டைக்குத்தான் நீங்கள் என்ரை புரு சன்''

கண்: ''அப்ப இவ்வளவு நாளும், அப்பா உங்கடை பெண்சாதியே!''

ஆ. மு: ''டேய்! சும்மா இரடா.. என்னகொண்டு வாறதெண்டு கேட்டிருக்கு என்னத்துக்கு எழு துவம்?''

ஆ. கு: ''இஞ்சாருங்கோ! நாலைஞ்சு, திறமான இலங்கச் சேலைக்கு எழுதுவமே?''

ஆ. மு: ''இலங்கா சேலைக்கோ... இலண்டனிலையோ ஐயோ! எனக்குப் பெண்சாதியா நீ அவதாரம் எடுத்தியே ..''

கண்; 'அப்பா! ஒரு ரான்சிஸ்ரருக்கு எழுதுவமே?'' (Transistor)

ஆ. கு: ''அதென்ன தம்பி, சாப்பிடுற தேதேனே ?''

ஆ. மு: [தன் தலையிலடித்து] ஆ! பஞ்சப்பரம்பரை! எந்த நேரமும் சாப்பாட்டு எண்ணம்தான்''

கண்: ''இல்லையம்மா! சின்ன ரேடியோ எழுது வமே ?''

ஆ. மு: ''டேய்! இலண்டன் ரேடியோ, இங்கிலீசில் தான் பாடும், அதை ஏன் இஞ்சை?''

கண்: ''இல்லையப்பா! எல்லா ஸ்ரேசனும் இழுத்துப் பாடும்''

ஆ. கு: ''பொலிஸ் ஸ்ரேசனுமோ?''

ஆ. மு: ''நாசமாய் போச்சு டேய் எதேன் எழுதிறதை எழுது பேந்து இங்கினேக்கை அதை வைச்சு, காச்சடா பூச்சடா எண்டு கத்தினியெண்டால், பொத்தி அடுப்புக்கை வைச்சுடுவேன். போ!''

[கண்ணன் ''மெயின் சமிர் ரு நகின்'' (Main shair to Nahin) என்ற ஹிந்தி பொபி பாடலை பாடிக் கொண்டு போகிறான்]

ஆ. மு: ''நல்ல நாள் பெருநாளில் அஞ, ஆவன்ஞ எண்டு தேங்காயுடைச்சு தமிழிலை ஏடு துடக்கி விட, பெடிப்பிள்ளை, காச்சுப் பூச்செண்டு ஏதோ இழவெல்லாம் பாடிக்கொண்டு. அறவையின்ரை உடுப்பும், தலையும்.. இப்பத்தையில் பெடியன் தமிழ் வளர்க்கினமாம் எப்பிடி?'

ஆ. கு: ''தம்பி, இங்கிலீசுப் பாட்டுப் பாடுருனெண்டு உங்களுக்குப் பொருமையாக் கிடக்காக்கும்.''

ஆ. மு; ''எனக்கொண்டும் அவனைப் பார்க்கப் பொரு மையில்லை, ஆனல் ஆச்சிக்குட்டி! சந்திக்குச்சந்தி வைக்கிற தபால்பெட்டி மாதிரி உன்னைப்பார்க்கத் தான், உன்ரை உடம்பைப் பாக்கத்தான் கொஞ் சம் பொருமையாக் கிடக்கு. அதுவும் இந்தப் பஞ்ச காலத்திலை குளுகுளு எண்டு .. வாட்டசாட் டமாய் இருக்கிருய் கண்ணூறுபடாமலிருக்க வேணும்''

ஆ. கு: ''என்னது? சும்மா பேசாமலிருங்கோ''

ஆ. மு: ''ஆச்சிக்குட்டி! உனக்கொண்டு சொல்லுறன் அந்த லண்டன் பெடியன் வந்திருக்கேக்கை மட் டும் உன்ரை சுயரூபத்தைக் காட்டிப் போடா தை...! அடக்க ஒடுக்கமாக என்ரை புருஷன் மாதிரி... சீச்சி... என்ரை பெண்சாதி மாதிரி இரு. இல்லையோ வாறபெடியன் இந்தக் கண்ணு ருவிக் காட்சிகளைப் பாத்துவிட்டு, இலண்டனுக் குப்போய், அங்கை எல்லாருக்கும் சொல்லி இங்கி லீசிலை சிரிக்கும்! விளங்கிச்சுதே.! சரி! உதுகளை விட்டிட்டு, இலண்டன் இஞ்சினியர் வரப்போ ருர் சும்மா இல்லை. கெளரவத்தையும் பாக்க வேணுமெல்லே''!

ஆ. கு: ''கெளரவம் பாக்கப் போறியளோ? இப்ப சரியான சனமாமெல்லே: இடிபட்டுச் சாகப் போறியளே''

ஆ. மு: இஞ்சையப்பா! நான் படத்தைச் சொல் லேல்லை எங்கடை கெளரவத்தை, மானம், மரி யாதையைச் சொல்லுறன், பொங்கை பார்! வேலி எல்லாம் பிஞ்சுபோய்க்கிடக்கு. வீடு வாச லைச் சுத்தமா வைச்சிருக்க வேணும்... வீட்டுக் கும் ஒருக்கா வெள்ளையடிச்சா நல்லது போலைக் கிடக்கு. இல்லையெண்டால் மதிப்பில்லை. இஞ் சத்தையில் வீடுகளைவிட, இலண்டனுன் கக்கூசு கள் திறமாம்! அண்டைக்கு அரியகுட்டியின்ரை பெண்சாதி சொன்னவள்...''

ஆ: கு: ''உங்களுக்கென்ன விசரே! அவன் ஆரோ இலண்டன்காரன் வந்தால் வந்திட்டுப் போகட் டன்! உவ்வளத்தையும் ஏன் செய்வான்? காசுக் கெங்கை போறது.. அவர் என்ன பெரிய கொம்பே ..?''

ஆ. மு: ''எடி விசரி! அறிவு கெட்ட கழுதை!''

ஆ. கு: என்ன? என்ன சொன்னியள் (கிட்ட நெருங்க)

ஆ. மு: ''ஐயோ! தெரியாமல் சொல்லிப் போட்டன்! மன்னிச்சுக்கொள்! எனக்கும் இடைக்கிடை. ஆடிக்கொருக்கா, அமாவாசைக்கொருக்கா கோபம் வாறதுதானே''

ஆ. கு: ''எனக்குக் கோபம் வந்தால் என்ன நடக்கும் தெரியுமே!''

ஆ. மு: ''ஐயோ! நான் ஆஸ்பத்திரியில் பத்தாம் வார்ட்டில் கிடக்கவேண்டி வரும் உனக்குத்தான் வீண் அலைச்சல்''

(ஆச்சிக்குட்டி ஒரு தொடர்.... )

# உங்கள் கேள்விகளும்

# உதவாத பதில்களும்

பவளராணி வல்லிபுரம் திருநெல்வேலி

கலகலப்பண்ணா!

முடி வளர்த்திருக்கும் படிக்காத வாலிபர்கள், பெண்களின் பின்னால் திரிவதென்ன?

பெண்கள் மட்டும் குறைந்தவர்களா? முடி வளர்த்த ஆண்களைத்தானே அவர்களும்...

N. கலாநாதன், புங்குடுதீவு.

தாயா? தாரமா? சிறந்தது?

திருமணத்தின் முன் தாய் திருமணத்தின் பின் தாரம்.

சபா ஈஸ்வரி, பலாலி வீதி, உரும்பராய்.

இன்றைய மிருகங்களுக்கு பேசும் சக்தியிருந்தால்?

ஏன் இன்றைய மனிதர்களே சிலர் பேசத் தெரியாமல் மிருகத்தனமாக பேசித் திரியும் போதுஏன் மிருகங்கள் பேசுவதை விரும்புகிறீர்?

K. பொன்னம்பலம், யோகபுரம்.

நீர் கனவு காண்பதில்லையா? கனவில் தோன்றுவது ...?

நான் அதிகமான மினி, ரைற்ரர், ஜங்கி பற்றிஎழுதுவது உமக்கு தெரியும்தானே! அப்படியானால் என் கனவிலும் நினைவிலும் ... புரியும்தானே?

(எனது கனவும் .. உமது நினைவும்)

செல்வி சு. வசந்தி, சுண்டிக்குளி.

காதலுக்கு கண்ணில்லையென்கிறார்கள், கண் இருந்தால் ...?

காதலும் இல்லை, திருமணமும் இல்லை, காதலித்து மணம் செய்து விட்டுச் செல்லும் நிலைகள் வராது.

செல்வி தா. ஞானேஸ்வரி, மிருக்காமம்பளை, வவுனியா.

அழகுள்ள இடத்தில் குணமிருக்காது. அப்படியானால் பணம் இருக்குமிடத்தில்...

வரவு செலவுக் கொப்பி இருக்காது.

(வருமான வரிப் பயம்)

## ஒரே வழி

அண்மையில் ஒரு விவசாய அறிவுப் போட்டியில் ஒருவர் 'பசுப்பால் பழுதாகாமல் இருக்க என்ன செய்யவேண்டும்' என கேட்டபோது அவர் 'பாலைக் கறக்காமல் மாட்டிலேயே விட்டுவிடவேண்டும்' என்றார்.

சபையில் எழுந்தது சிரிப்பொலி.

—டோ—

செல்வி ஜெயந்தி சிவரத்தினம், மல்லாகம்.

இன்றுள்ள பட்டாம் பூச்சி வாலிபர்களை ஆதரிக்கிறீர்களா?

பூக்கள் கவர்ச்சியை வெளியே காட்டி நிற்கும் போது பட்டாம் பூச்சிகளில் அன்பு இல்லாதிருக்கமுடியும்?

S. சிவசக்தி, யாழ் வீதி, (யாழ்)

திசனே! எதற்கெடுத்தாலும் காதல் என்ற முடிபுதான் விடையாகத் தருகிறீர்கள், உங்களுக்கு காதலென்றால் பிடிப்போ?

எல்லாம் வல்ல 'ஈசனே' காதல் புரியும் போது இந்த 'திசன்' எந்தமட்டு சக்தி?

K. செல்வநாதன், மயிலணி, சுன்னாகம்,

அன்பன் திசண்ணா, மலருக்கும் மங்கைக்கும் உள்ள வேற்றுமையென்ன?

மலர் வாடும், மங்கை வாட்டும்

K. S. கார்த்திகேஸ், கல்முனை.

இரவல் கொடுக்கக்கூடியது எது. கொடுக்க முடியாதது எது?

கொடுக்கக்கூடியது பொன்னகை.

கொடுக்க முடியாதது புன்னகை.

பால—பாலசூரியன், அளவெட்டி.

இன்று உலகம் காதலையா சாதலையா விரும்புகிறது?

காதலின் பின் சாதலை.

தி.ச.ன்.

மிஸ் ஈஸ்வரி சிவசாமி, ஆவலிய, நுவரெலியா,

அந்தக்கால பெண்கள் விரும்பியது என்ன? இந்தக்கால பெண்கள் விரும்புவது ஏன்ன?

அந்தக்கால பெண்கள் விரும்பியது கண்நிறைந்த கணவனை. இந்தக்காலத்தில் கைநிறைய சீதனம் பெற்று தம்மை வெளிநாடு கொண்டுசெல்லும் கணவர்களை அதுதான் பெருமை.

K. வரதராஜா, 38, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,

எனது காதலியை சந்திக்கும்போது எனக்கு நடுக்கம் ஏற்படுகிறது, அதேபோல்தான் எனது காதலிக்கும்?

இதற்கு என்ன செய்யலாம்?

Oh! சூலேற், 60 வயதிற்கு பின் நடுக்கம் வருவது இயற்கைதான்.

பெரியவர்களே! இந்த நடுங்கும் வயதில் என்ன காதல்.

(உமது நடுக்க காதலும் ஒரு கேள்வியும் )

M. J. ராணி, வெள்ளவத்தை, வதுளை

கா(த)லின் வருத்தம் காரணத்தால், ஆதாரமாக இருக்க உ(த)விக்கும் என்னை சேர்ப்பீர்களா? திசனரே!

சா(வா)லியான எனது மனதிற்கு (ஆ)தாரமாக.

வாழ்க்கையென்பது ஆற்று நீரைப்போன்றது ஓடிக் கழிந்துகொண்டே போகும்

## அடிக்குமேல் அடி அடித்தால்

முதல்நாள் ஆசிரியர் மாணவர்களுக்கு பொன் மொழிகள், பழமொழிகள் கற்பித்திருந்தார்.

அடுத்தநாள் பிரம்பும்கையுமாக வந்தார், பொன்மொழி, பழமொழி தெரியாதவர்களுக்கு பாரபட்சமின்றி பிரம்பு மழை பொழிந்தார்.

''அடிமேல் அடி அடித்தால் .........'' மீதியை முடியென்றார்.

(முன்னுலிருந்த மாணவனுக்கு அடியால் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது)

"அடிமேல் அடி அடித்தால் இரத்தம் வடியும்" சார் என்றான். கவலையையும் மறந்து மாணவர்கள் அனைவருமே சிரித்தனர். சிரிப்பை அடக்கியவாறு நகர்ந்தார் ஆசிரியர்,

பா. சிவானந்தன் உரும்பிராய்.

சி. செல்வராணி, ஏழாலை மேற்கு,

◎ பெண்களுக்கு பொறுமையே பெருமை தருமென்கிறேன் நான். தாங்கள்?

✲ கண் 'மை' தான் பெருமை என அவர்கள் நினைக்கிறார்களே!

செல்வி ஏ. எஸ். ராணி, மாம். தெல்லிப்பளை.

◎ சேலை கட்டிய மாதரை நம்பாதே என்கின்றனர் சிலர், மினியுடுத்தியவரை நம்பாதே என்கின்றனர் சிலர் உமது கருத்து ..?

✲ 'பெண்களை நம்பாதே கண்களே, பெண்களை நம்பாதே' என்றுவிட்டாரே ஒரு கவிஞர், அப்படியானுல் ......

சு. சரோஜா, செயந்தி நகர், கிளிநொச்சி.

◎ ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு வரப் பாகும் ஆண் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்?

✲ வெளிநாட்டில் (ஏதாவது) வேலை பார்ப்பவராக இருத்தல் வேண்டும். (அதுதான் அவர்களின் விருப்பம்.

இ. மலர், பண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

◎ உங்களுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் உங்களுக்கா அல்லது உங்கள் அப்பா அம்மா அவர்களுக்கா?

✲ அப்பா அம்மாவைவிட (உம்மைப் போன்ற) வாசகர்கள் பலர்தான் ஊக்கமுடன் இருக்கிறார்கள். (நான் நன்ருகவிருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லைப் போலும்)

| அடுத்த இதழ் பரிசுத் தொகை | உதவாத கேள்விகள் |
|---|---|
| 15/- 10/- 5/- | 'கலகலப்பு' |
| கூப்பனின்றி வருபவை ஏற்கப்படமாட்டா | இனுவில். |
| தபாலட்டையில் மாத்திரம் 3 கேள்விகள் அனுப்பலாம். | |

## குற்றம்

ஐயாத்துரை முதலாளி
அவருக்கு நான் தொழிலாளி
இருவருமாய் பெருங்குற்றம்
இழைத்துவிட்டோம் ஒருவனுக்கு
ஐயாத்துரை செய்தகுற்றம்
அறியாமல் செய்த குற்றம்
ஆனுல்...? நான்! செய்தகுற்றம்
அறிந்துகொண்டு செய்தகுற்றம்

## தண்டனை

விலையுயர்ந்த சருவக்குடம்
வீட்டினிலே காணவில்லை!
எடுத்தவனே சண்டியன்
எப்படி நான் தண்டிப்பது?
விலைகுறைந்த சிறுசெம்பும்
வீட்டினிலே காணவில்லை!
களவெடுத்த சிறுவனுக்கோ
கையடிகள், காலடிகள்

= வடவரணியூர், சி. சபா =

(ஓரு கருத்து உரு)

செய்திப் பத்திரிகைகள், புகையிலை, சுருட்டு வகைகளை பெற நாடுங்கள்

**லிங்கம் ஸ்ரோர்**

பலசரக்கு வியாபாரம் (கலகலப்பு ஏஜன்ட்)
அம்பகமுக வீதி, நாவலப்பிட்டி.

நம்பிக்கை நாணயம், சிறந்த பொருட்கள் நிதான விலையில் கட்டட இரும்பு பொருட்களுக்கு

**Central Trading Corporation**

**சென்றல் டிரேடிங் கோப்பரேசன்**

27, கம்பளை ரோட், நாவலப்பிட்டி.
தொலைபேசி : 328

நங்கையர் விரும்பும் நவநாகரீக நகைகளுக்கு நாடுங்கள்

**யாழ்ரண் ஸ்ரோர்ஸ்**

**YARLTON STORES**

( JEWELLERS )

103, கொழும்பு வீதி, கண்டி.

குழந்தைகளைத் திருத்தவழி அவர்களைப் பாராட்டுவதுதான்

குறையுடை தரித்த குமரிகள் அங்கு

## திருவிழா

இணுவையூர் பாஸ்கர்

நல்ல திருவிழா பார்க்கவே என்று,
சொல்ல முடியாத பக்தியே கொண்டு,
வல்ல இறைவனை வேண்டவே நன்று,
நல்ல சைவர்கள் கூடினர் அன்று!

வீதிகளெல்லாம் ஒரே சனக் கூட்டம்!
வாலிபர் பாடும் பெரும் கொண்டாட்டம்!
பாவதயில் பாவையர் மேலும் திண்டாட்டம்!
பக்தர்கள் வேண்டினர் போலும் மன்றாட்டம்!

குலைபோட்ட வாழையை அடியோடு வெட்டி,
குருத்தோலை தோரணம் அதனோடு கட்டி,
கலைஎழில் சிந்து சிகரமும் வைத்து,
கலர் பல்ப்பு எரியும் சுடர்தீபக் காட்சி,

தென்னை மரமங்கு தெருவிலே வந்து
பனையோடு தானிற்கும் அழகென்ன அழகோ,
புன்னகையோடு பொன்னகையும் பூட்டி,
பூவையர் போகின்ற போக்கென்ன போக்கோ,

ஆங்காங்கு அலறும் ஒலிபெருக்கி கூட,
அப்பப்போ குளறும் திருடர்கள் பற்றி!
எங்கெங்கோ அலையும் திருடர்கள் நாட,
எம்மவர் அணியும் நகைகள் தானென்னே!

கடலைக் காரியை சுற்றியே நிற்பர்,
குளுகுளு ஐஸ்கிறீம் 'வானே'டும் மகிழ்வர்,
விடலைக் கதைபேசி விசிலுமே அடிப்பர்,
வீதியில் சிறுநீரும் விடியவே பொழிவர்!

குறையுடை தரித்த குமரிகள் அங்கு,
கும்பிட வந்து கண்களை எறிவர்,
குறையுடல் காண காளையர் அங்கு,
காத்தே யிருந்து கரணமு மடிப்பர்!

தூங்கியே வழியும் நங்கையயர் சிலரும்,
தூங்காது துடிக்கும் தம்பியர் பலரும்,
ஏங்கியே கண்கள் வீசுதல் கண்டு;
வாங்குவர் வீட்டினில் ஏச்சுகள் நன்கு!

பெண்டுகள் பெரும்பாலும் பேசுவர் வம்பு!
கண்டுடின் சேலையைக் கணவரும் துரும்பு,
பெண்களின் கண்களும் காளையர்க் கம்பு.
கண்டபடி எழுதிடின் நானுமோர் வம்பு!

மேடையின் மீதிலோர் 'மங்கியர்' கூட்டம்!
பாடிடும் பாட்டிலே பொப்பிசை ஆட்டம்!
தேடிடும் கண்களும் மப்பினில் நாட்டம்!
தள்ளாடும் கிழவரோ வீட்டுக்கு ஓட்டம்!

தாரத்தின் தாலியை அடைமானம் வைத்தே;
தடபுடல் திருவிழா செய்வதும் என்னே!
ஓரத்தில் காமியை சீரழிய வைத்தே,
ஓய்யார வேடிக்கை காண்பதும் என்னே!

கோயிலின் கட்டிடம் இடிந்திடும் நிலையில்,
கோடியாய் பக்தர்கள் குவிந்திடும் பொழுதில்
ஆயிரம் எண்ணியே விழாக்களை செய்வார்!
ஆலயம் திருத்திட வழியேதும் காணார்!

## பல்சுவையான பத்திரிகை செய்திகள்

பேரா & உடுவைபேகன்

மழை வெள்ளம் வீடுகள் நாசம்
2000 குடும்பங்கள் வீதியில்

※ புது வெள்ளம் ※

இலங்கையில் மணமுடித்து பெற்ற குழந்தையை பெற்றுத்தரும்படி வெளிநாட்டு பெண்மணி வழக்கு.

※ மேல் நாட்டு மருமகள் ※

சந்தையில் மீன் வாங்கி உண்ட பெண்மணி மயங்குகிறாள்.

※ மயங்குகிறாள் மாது ※

பரீட்சையில் பலமுறை தோல்வி கண்ட மாணவி தற்கொலை

※ கௌரவம் ※

தண்ணீர் கேட்டவர் தாலியை அறுத்தாராம்.

※ தாலி பாக்கியம் ※

5 பிள்ளைகளின் தாய் 23 வயது இளைஞனுடன் ஓட்டம்.

※ அம்மா எங்கே? ※

நெடுங்கேணி கொள்ளை யாழ்நகரில் பிடிபட்டது.

※ காலம் வெல்லும் ※

புலோலி வங்கியில் பகலில் கொள்ளை

※ அதிசயத் திருடன் ※

கழக நெருக்கடியை விட்டு விலக நான் விரும்பவில்லை.

※ சபாஷ் தம்பி ※

இளைஞர்கள் நல்முயற்சிக்கு என்றும் எமது ஸ்தாபனம் ஊக்கமளிக்கும்.
(மில்க்வைற் அதிபர் கனகராஜா)

※ நாட்டுக்கொரு நல்லவன் ※

என் உயிருக்கு ஆபத்து (ஜே. ஆர்.)

※ உயிர்மேல் ஆசை ※

இளைஞர்கள் மாணவர்களின் விவசாய அறிவையும்நல்முயற்சியில் ஈடுபடுத்துவதே இளம் விவசாயிகள் ஒன்றியத்தின் நோக்கம்

※ எங்கள் விருப்பம் ※

காதலியை சந்திக்கச் சென்றவர் கார் விபத்தில் பலி.

※ அன்பைத் தேடி ※

தமிழர்களுக்கென தமிழ் நாடு நிறுவியே தீருவோம் (எஸ். ஜே. வி.)

※ நாளை நமதே! ※

தமிழர் விடுதலையை முன்னிட்டு 3 தலைவர்கள்.

※ மூன்று தெய்வங்கள் ※

சிலர் பணத்தை வெறுப்பதாக சொல்வார்கள் அவர்கள் வெறுப்பது பிறரிடமுள்ள பணத்தையே

உங்கள் வீட்டுத் தேவைகளுக்கான பல்வேறு விதமான மரவகைகளை அரிந்து கொடுக்கவும்.

மரவகைகளைப் பெற்றுக் கொள்ளவும் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

மர அரிவு ஆலை

மரங்கள் ஏற்றிச் செல்வதற்கான வாகன வசதிகள் உண்டு

K. K. S. வீதி, மருதனார்மடம்.

தரத்தில், சிறந்த, உயர்ந்த மணம், காரம், நிறைந்த புகையின்பத்தை மகிழ பாவியுங்கள்

ஜனதா சுருட்டுகள்

ஜம்போ சுருட்டுகள்

119/1, ஆட்டுப்பட்டி தெரு, கொழும்பு—12

போன்: 33935

தீஞ்சுவை! திகட்டாத மணம்! தினம் நாடி வருபவர் பலர்!

ஐஸ் கோப்பி

சூடான கோப்பி

சிற்றுண்டிகள்

அண்ணு கோப்பி [B] பார்

களைப்பை நீக்கி! களிப்பை தருவது!

4, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

உடன் வறுத்து அரைக்கப்படும் அண்ணு கோப்பி தூளையும் வாங்கிச் சென்று மகிழுங்கள்

நாடு செழிக்க,
நாளும் உழைக்கும்,
நமது விவசாயிகள்,
நலம் காண வைப்போம்!

பீப்பிள்ஸ் ரேட் அன் சப்ளைஸ்

Peoples' Trades & Supplies

143, மலிபன் வீதி T. P. 25389

112, 4ம்குறுக்குத்தெரு, T.P. 23509

கொழும்பு—11

## பக்கத்து வீட்டு பொன்னம்மா பற்றி பாடுகிறார் ஒருவர்

இயற்றியது S. ஈஸ்வரி உரும்பராய் — பாடியது ? ? பலர்

பொன்னம்மாவின் வாயினிலே கட்டுப்பல்லு
பொல்லாத வார்த்தைகளோ! அதிகமடா!
வேலியால் பாப்பாளோ!
ஒட்டுக் கொஞ்சம் கேட்பாளோ!
'மித்திரன்' போலச் செய்தி
அடிக்கடி தருவாளோ (பொன்னம்மாவின்)

காகம்போல பொண்ணு நாலு இருக்குது
அவர்கள் பின்னல் பல பெடியள் திரியுது
மகன் கள்ளுக்குடிக்குது
வெறியில் தள்ளாடுது

காணக்கான சிரிப்பு
கண்ணே ரொம்ப சிவப்பு
பொன்னம்மாவின் மகளின் லவ்வர் கொழும்பிலே
கிழமையில் 2 ருத்தல் கடிதம் வருகுது
ரவுணுக்கு போகிறு
தினமும் மெற்னி பார்க்கிறு
பொன்னம்மாக்கா பாவம்
பொடிச்சி ரொம்ப மோசம் (பொன்னம்மாவின்)

## வளரும் இளைஞர்களின் வளமான செய்திகள்

★ ஏழாலை இளம் விவசாயக் கழகத் தலைவர் S. சுந்தரமூர்த்தி தலைமையின் கீழ் 9–5–1975 அன்று நடைபெற்ற விழாவில் புதிய அங்கத்தவர்கள் பலர் சேர்ந்து கொண்டனர்.

இளம் வி. க. போதனாசிரியர்கள் திரு. S. சிவானந்தம், திரு. S. குகநாதன் விவசாய சேவையாளர் திரு. விசுவலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

மேற்படி விழாவில் நடைபெற்ற ஒன்றியத் தலைவர் திரு. S.K. தீசன், திரு. S. சிவானந்தம் ஆகியோரால் நடாத்தப்பட்ட விவசாய அறிவுப் போட்டியில் யாழ். இ. மகளிர் கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

★ துணுக்காய் விவசாயப் போதனாசிரியர் பகுதி பிரிவிலுள்ள தெனடி விவசாயக் கழகத்தினர் நட்புறவுக் கழகங்களான வெலிங்டன், பண்டார வன்னியன், கல்விளான் ஆகியவற்றுடன் இணைந்து மேதினத்தன்று யோகபுரத்தில் நடைபெற்ற உழவன் விழாவை வி. போதனாசிரியர் திரு. சி. சிவானந்தம் அவர்கள் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

மேற்படி விழாவில் கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் யாழ் மாவட்ட இளம் விவசாய ஒன்றியத் தலைவர் திரு. K. S. தீசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

★ மே மாதம் 2ம் திகதியன்று வவனிக்குளப் பகுதியில் பண்டார வன்னியன் கழகத்தில் திரு. சு. இரத்தினராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமெரிக்க அனுபவமும் விவசாய அனுபவங்கள் என்ற பொருள் பற்றி திரு. K. S. தீசன் உரையாற்றினார்.

தகவல்—C. S. பாஸ்கர்

# அமெரிக்க அனுபவங்கள்

## அந்தப் பெண்மணி எனக்கு கடிதம் வைத்த இடம்

பாடசாலையை விட்டு வெளியேறியதும், டியூடரிகளில் படிக்கும் காலத்தில் நான் பார்த்த சினிமாப் படங்களுக்கோ அளவில்லை, அதுவும் மெற்னிஷோ.

அப்படியிருந்த எனக்கு வீட்டிலேயே சினிமா பார்க்கும் வசதியிருந்தால், எப்படியிருக்கும் (முன்வீட்டில் காதலிக்க பெண் கிடைத்ததுபோல) எனது அமெரிக்க வாழ்க்கையின்போது விவசாய குடும்பங்களுடன் தங்கியுள்ளபோது எனக்கு மிகவும் பிடித்ததும் குடும்பத்தினருக்குப் பிடிக்காததும் ரெலிவிஷன் ஒன்று தான்.

நான் தவறுது ரெலிவிஷன் (T. V.) பார்ப்பதையொட்டி என்னை நன்கு கேலி செய்வார்கள்.

இரவு 10 மணிக்குப் பின்னர் பயங்கரமான ஆங்கிலப் படங்கள் தவறுது 2, 3 மணிவரை பார்த்துக் கொண்டேயிருப்பேன். அங்கு பாடசாலை மாணவர்களை இரவு பிந்திய காட்சிகளை (Late night show) பார்க்க அனுமதிப்பதில்லை. அவர்கள் படுக்கைக்குச் சென்றதும் நான் தொடர்ந்து ரெலிவிஷன் காட்சியை ரசிப்பேன் அப்படியே நிலத்திலேயே தூங்கிவிடுவேன். ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது, அந்த வீட்டிலுள்ள இரு சிறுவர்கள் பெற்றோர் படுக்கைக்குச் சென்றதும் என்னுடன் சேர்ந்து T.V. காட்சிகளை ரசித்தனர் இது பெற்றோருக்குத் தெரியாது. அடுத்த நாள் இரவுக்காட்சியை பற்றி கேட்டனர். நான் விளக்கிக் கொண்டிருந்த பொழுது என்னைவிட முண்டியடித்துக் கொண்டு அந்த இருவரும் கூறினர். மணலுள் மூழ்கி கிடக்கும் நுணலும் தன்வாயால் கெடும். அதுபோல அந்த இருவரும் வகையாக மாட்டிக் கொண்டனர். இதனையடுத்து எனக்கும் ரெலிவிஷன் காட்சி கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. (இங்கு கூட்டங்கள் நேரக்கட்டுப்பாடு விதிப்பது போன்று)

அதிக பணம் உள்ள வீடுகளில் 2, 3 ரெலிவிஷன்கள் கூட உண்டு. நான் தங்கியிருந்த வீடொன்றில் நான் பண்ணையொன்றை பார்த்துவிட்டு வந்தபொழுது ரெலிவிஷன் சுவிச்சோடு ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அது இலங்கையிலிருந்து எனக்கு வந்த கடிதம். ஏன் கடிதத்தை அப்படி வைத்தீர்கள் எனக் கேட்டேன். நீர் வந்ததும் முதலில் ரெலிவிஷனை போடுவீர்கள் என எங்களுக்கு தெரியும் அதுதான் அப்படி வைத்தேன் என கூறினார் அந்த குடும்பத் தலைவி.

---

பரிசு பரிசு பரிசு

**ரூபா 200/**

பரிசுப் பணம் ஒதுக்கீடு

அடுத்த இதழில்

மாணவர் குறுக்கெழுத்துப் போட்டி

---

## இரண்டறக் கலந்து

கொழும்பில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு தமிழும் அரைகுறையாக படித்த ஆங்கிலமும் பேச ஆசை

இதோ

Mummy Mummy 'Cow' வுகிட்டே Milk குடிக்க கன்றுக் குட்டி 'run'னுது.

மம்மி மம்மி கவ்வுகிட்டே மில்க் குடிக்க கன்னுக்குட்டி றண்ணுது.

(அம்மா அம்மா பசுவிடம் பால்குடிக்க கன்றுக் குட்டி துள்ளி ஓடுது.)

எங்கோ கேட்டவர்

— டோ —

---

## கைதி

(ஆண்டவனே காத்தருளும்)

முன்னே கூடையைத் தூக்கியவண்ணம் ஒரு நடுத்தர வயதுடையவர் சென்றுகொண்டிருந்தார் அவரைத் தொடர்ந்து ஒரே கூட்டம் பின்சென்றது. "ஊர்வலம் செல்லக் கூடாது தெரியாதா உமக்கு" ரோந்து சுற்றி சென்ற பொலிசார் பிரட்டினர். அதற்கென்ன செய்ய இது எனது பிள்ளைகளும் மருமக்களும் பிள்ளைகளும் என்றார் அந்த குடும்பத்தில் பெரியவர்.

ஆண்டவரே அவர்களைக் காப்பாற்றும் என்றவாறு நகர்ந்தார் பொலிசார்.

---

✯ திருமணத்தின் முன் ஒரு பெண் கர்வமாக இருக்கலாம் ஆனால் கர்ப்பமாக இருத்தல் கூடாது ✯

## முக்கிய கவனிப்பு

**வாசகர்களே !**

★ கலகலப்பிற்கு கதை, கவிதை. துணுக்கு, (நகைச் சுவையானவை மட்டும்) ஏற்றுக்கொள்ளப்படும்; தரமுள்ளவை மட்டும், வரிசைக் கிரமத்தில் பிரசுரிக்கப்படும். பிரசுரிக்கப்படாதவை திருப்பி யனுப்பப்படமாட்டா.

★ அனுப்பும் விடயங்கள் புல்ஸ்காப் தாழில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி, புனைபெயரையே அல்லது பெயரையும் குறிப்பிட்டு அனுப்பவும்.

★ கேள்வி பதில்கள் மட்டும் தபாலட்டையில் அனுப்புதல் வேண்டும். (கேள்விபதில் நிச்சயம் தபாலட்டை மூலமே அனுப்புதல் வேண்டும்)

★ பல கன்னியர்கள் தம்மை கலகலப்பு தாக்கி எழுதுகின்றது என முறைப்பாடு செய்துள்ளனர் அடுத்த இதழ் மங்கையர் விரும்பின் எழுதி யனுப்பலாம், பிரசுரிக்கப்படும்.

★ முத்திரை ஒட்டாமல் வரும் மொட்டைக் கடிதங்கள் ஏற்க நாம் தயாராக இல்லை.

---


நாடுங்கள்

எக்சோறு, போர்கன்விலா றேஸ் (ஒட்டப்பட்டவை) முசடாஸ் முதலியன பெறவும்
மற்றும் முந்திரிகை, பலா முதலியன பெறவும்

**சாந்தி தோட்டம்**

இணுவில்.

களைப்பைப் போக்கி உற்சாகமளிக்க
சூடான குளிரான பானங்கள்
அறுசுவை உண்டிகளை உண்டு மகிழ
நாடுங்கள்

**டவர் கோப்பி பார்**

**Tower Coffee Bar**

சினிமா பாட்டு புத்தகங்கள்
செய்தி பத்திரிகை விற்பனையாளர்
வெலிங்டன் தியேட்டர் முன்பாக
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

நேரம் பொன்னானது! உங்கள் கைக்கடிகார மூலம்
சரியான நேரத்தை அறியுங்கள்
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடு
(மின்பற்றிகள்) மேசை மணிக்கூடு
நல்ல முறையில் திருத்த

**ஸ்ரீறியோ வாச் வேக்ஸ்**

**STERIO WATCH WORKS**

(மற்றும் றேடியோ, பெற்றோமாக்ஸ், சைக்கிள்) திருத்துமிடம்.

**கமலா சைக்கிள் வேக்ஸ்**

K. K. S. வீதி. இணுவில்;

பொபி Bobby

ஆஹாஹா என்ன நறுமணம்

**பொபி பத்திகள்**

தயாரிப்பாளர்கள்:
நத்தாராம் பொத்தை, குண்டசாலை.
Bobby பொபி

**A M K K**

**ஏஜென்சி**
கொழும்பு

பாவனைக்கு உறுதியான
அலுமினிய கண்ணடிப்பாத்திர
வகைகள்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற

**ரி.எஸ்.ரி.பி.ரி.&கோ.**

**T. S. T. P. T. & CO.**

49, டாம் வீதி, கொழும்பு-12
தொலைபேசி: 31035

ஆஹாஹா !
என்ன குழுமை ! என்ன இனிமை !!

**சுவீற்றி கூல்**

**SWEETY COOL**

சூடான குளிரான பானங்கள்
சிற்றுண்டி வகைகள் ருசித்திட
சிறந்த இடம்
சுவீற்றி கூல்
பண்டத்தரிப்பு


வாழ்க்கை வெற்றி பெற அன்று செய்ய வேண்டிய கடமையை அன்றே செய்

Regd. at G.P.O. தலைமைத் தபால் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது.
KALAKALAPPU Monthly Cartoon Magazine June 1976

* Oh! I didn't Know that

குடும்பத்துடன் சென்று குளுகுளு குளிரூட்டப் பட்ட சுபாஸ் கபேயில் அறுசுவை உணவுகளையும் சுவை குன்றாத ஐஸ்கிறீம் வகைகளையும் சுவைத்து மகிழுங்கள்.

சுத்தம், சுவை, கனிவான சேவை

ஒருத்தி: என்னப்பா உன்னுடைய கணவன் முந்தி சரியான மெல்லிசாக இருந்தவர் இப்ப, ஊதிக்கொண்டு போகிறார்.

மற்றவள்: ஒன்றுமில்லையப்பா, அவரிப்ப 'ஜவ்னு ரவுனில்' வேலை தினமும் சுபாஸ் கபேயிலேதான் சாப்பிடுகிறார்.

அதோட இப்ப குளுகுளு என ஏர் கண்டிஷன் போட்டுடிருக்கினம் நல்ல கலகலப்பாயிருக்கு.

# சுபாஸ் கபே SUBAS CAFE

176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(குளிரூட்டப்பட்டது AIR CONDITION) போன்: 578

ஓ! அதுவா?

லதா: ஏன்டி சுஜி நீ வரும்போது கமகமவென்று வாசனை வீசுகிறது. எல்லா மாணவர்களும் உன்னையே பார்க்கிறார்களே ஏன்டி?

சுஜி: ஓ! அதுவா? நான் சாதாரணமாக நியூ குணேகா பவுடர் பாவிக்கிறேன். அதுதான்டி வேறொன்றுமில்லை.

* கவர்ச்சி * நறுமணம் அனைத்தும் கொண்டது

## நியூ குணேகா பவுடர்
## NEW GUNEKA TALCUM POWDER

விநியோகஸ்தர்கள்:

J. M. டொமினியன் ரொட்டிக்கே & கோ.

170, மலிபன் வீதி, கொழும்பு—11

தொலைபேசி 27668

சிறந்த வெண்மைக்கு பெனிகுயின் நீலம்

இறைவன்: பக்தா உன் உளத் தூய்மைக்குக் காரணம் அறிந்தேன். ஆனால் உன் உடைத் தூய்மையைத் தான் அறிய முடியவில்லை.

பக்தன்: சுவாமி, என் உடைத் தூய்மைக்கு 'மில்க்வைற்'சோப் தான் காரணம்.

அன்றும்! இன்றும்! என்றும்! சவர்க்காரத் தயாரிப்பில் பிரசித்தி பெற்று விளங்குபவர்கள்.

## மில்க் வைற் ஸ்தாபனத்தாரே

* நீலசோப் * பார் சோப் * சலவை பவுடர்

தயாரிப்பாளர்கள்:

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77 யாழ்ப்பாணம் போன்: 7233

மில்க் வைற் உற்பத்திப் பொருட்களை வாங்கிப் பாவித்தால் பல சேவைகளுக்கு அது பயன்படுகிறது

ஊக்கமுடன் உழைப்பதில் பெருமை கொள்ளும் விவசாயன் உற்பத்திப் பொருள்களை நல்லமுறையில் விற்பனை செய்வதில் நாம் பெருமையடைகின்றோம்.

## தி. சு. பி. சுப்பையாபிள்ளை அன் கோ,
## T. S. P. SUBBIAHPILLAI & CO.

(கமிஷன் ஏஜெண்ட்)

உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்

108, 4ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11

குறைந்த விலை! நிறைந்த பயன்!

ஆடவர்கள், நங்கையர், மாணவர்க்கேற்ற நவீன காலணிகள் அழகு சாதனப் பொருட்கள் கோல்ட் கவறிங் நகைகள் மற்றும் அலுமினிய பாத்திரவகைகள் சாய்புச் சாமான்கள் பெற நாடுங்கள்

பாக்கியம் அன் கம்பனி
## PACKIAM & COMPANY

9, கம்பளை றோட், நாவலப்பிட்டி

ஆஹாஹா!

இல்லத்தில் இனிய மணம் தவழ!
உள்ளத்தில் உவகை நன்கு பெருக!
ஆலயத்தில் பரவசமே நிலவ!
அனைவருமே பாவிப்பது!

## பொபி பத்திகள் Bobby Pathies

நத்தராம் பொத்தை, குண்டசாலை.

இப்பத்திரிகை 68, சுந்தரபவனம், இணுவில் கிழக்கைச் சேர்ந்த இதன் உரிமையாளரும் ஆசிரியருமான (எஸ். கே. நிசன்) சி. கேதீஸ்வரன் என்பவரால் யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு ஜூன் 1976ல் வெளியிடப்பெற்றது.